HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

4 ஆம் தொகுதி - நான்காவது இதழ் - 2015 செப்டெம்பர்



தயாரிப்பு: திருமதி நிஷாந்தி சமுத்ரா குமாரி
எச்.என்.பி.கிராமின் கல்கமுவ கிளை அங்கத்தவர்
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க



## வாழ்க்கையின் அர்த்தம்

# ஊர்சுற்றித்திரிந்தவரை தனவந்தராக மாற்றிய கடல் சிப்பி

**“ஏழை மனிதர் ஒருவர் எஜமானராக மாறிய கதைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால், ஊர்சுற்றித் திரிந்தவரை பணக்காரராக மாற்றிய கடல் சிப்பி தொடர்பில் இதற்கு முன்னர் கேள்விபட்டுள்ளீர்களா... இன்று நாம் அவ்வாறான ஒருவர் பற்றிய ஊர்சுற்றிய ஒருவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பு முனையாக அமைந்த சிப்பியின் கதை உங்களுக்கு தருகிறோம்.**

மாகஸ் சாமுவேல் . . .இந்தப் பெயரை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன். இவர் 1800ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் பிறந்த ஏழை இளைஞராகும். அக்காலப்பகுதியில் இங்கிலாந்தில் வேலையில்லாப் பிரச்சினை காணப்பட்ட காலப்பகுதியாகும். மாகஸ் சாமுவேல் உயர் படிப்பை மேற்கொண்டு வேலையில்லாமல் வீணாக பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த இளைஞராகும். நாளாந்தம் கடற்கரைக்கு சென்று அங்கு சுதந்திரமாக அங்குமிங்கும் திரிந்து பொழுதைப் போக்கும் பழக்கத்தை கொண்டிருந்தார். எனினும் அவர் அந்தக் காலத்தில் மன உளைச்சலுடனேயே வாழ்ந்து வந்தார். ஏனெனில் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான வழியின்மையாலாகும். இவ்விதம் தனது இளமைப் பருவத்தை மன உளைச்சலுக்கு மத்தியில் போக்கிக் கொண்டிருந்தார். என்றாலும் பல தொழில்களுக்கு முயற்சி செய்த போதும் இறுதியில் தோல்வியே கிடைத்தது. இவ்விதம் ஒரு நாள் கடற்கரையின் ஓரமாக நடந்து கொண்டிருந்த போது கடற்கரையின் ஓரமாக கடல் சிப்பிகள் அங்குமிங்கும் காணப்பட்டதை அவதானித்தார். அதன் பின்னர் கடல் ஓரத்தில் கிடந்த சிப்பிகளை எவ்வித நோக்கமும் இன்றி ஒன்று திரட்டினார். நேரம் விரயமானது அவருக்கு தெரியவில்லை. இவ்விதம் எடுத்துக் கொண்ட சிப்பிகளை மாகஸ் வீட்டுக்கு எடுத்துச் சென்றார். இவ்விதம் சேமித்த சிப்பிகளைக் கொண்டு எவ்வகையான பொருட்களை தயாரிக்க முடியுமென்று பல நாட்கள் சிந்தித்தார். அதன் பின்னர் அந்த சிப்பிகளில் உள்ள மணலை அகற்றி நன்றாக சுத்தப்படுத்தினார். அவ்விதம் சுத்தப்படுத்திய பின்னர் மாகஸ் அந்த சிப்பிகளை நாளாந்தம் தனது கண்களுக்கு தெரியுமாறு வைத்துக் கொண்டார். அவருடைய மனம் இந்தச் சிப்பிகளை பார்வையிடும் போது எவ்வகையான பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமென்ற படைப்பாக்கத்திறன் வரும் என்ற நோக்கத்திலேயே அவர் கண்களுக்கு தெரியுமாறு வைத்திருந்தார். இறுதியில் அவருடைய உள்ளத்தில் இதன் மூலம் ஏதேனும் பொருள் செய்ய முடியுமென்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதாவது அந்த சிப்பிகளைக் கொண்டு கழுத்தணிகளை உருவாக்க முடிவு செய்தார். அந்த கழுத்தணிகளை நிர்மாணித்து சந்தையில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்தார். அந்தக் காலப்பகுதியில் பெண்களின் கழுத்தில் இவ்வாறான மாலைகள் காணப்படுவதில்லை. இவ்வாறான கழுத்தணிகளை பெண்கள் அணிவதில்லை என்ற காரணத்திலேயே மாகஸ் புதிய படைப்புகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கருதினார். இவ்விதம் ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்ட பல கழுத்தணிகளை கடற்கரை ஓரமாக செல்லும் பெண்களுக்கு இலவசமாக வழங்கினார். மறுநாள் கழுத்தணிகளை அந்தப் பெண்கள் மீண்டும் அணிந்து வந்ததை பார்த்த மாகஸ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். கழுத்தணி அணியாத சில பெண்கள் இந்த மாலையைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் தகவல்களை பெற்றுக் கொண்டனர். அதன் பின்னர் எமக்கும் அந்த கழுத்தணிகளை நிர்மாணித்துக் கொடுக்க முடியுமா என மிகவும் ஆர்வமாக கேட்டனர்.

இதன் போது அந்த பெண்களுக்கு இலவசமாக கழுத்தணிகளை வழங்குவதற்கு முன்வரவில்லை. ஏனெனில் தன்னால் நிர்மாணிக்கப்பட்ட மாலைக்கு நல்ல கேள்வி காணப்படுகின்றது என்பதை மாகஸ் உணர்ந்த காரணத்தினலாகும். இதனால் தன்னால் நிர்மாணிக்கப்படும் மாலைகளுக்கு மாகஸ் ஒரு விலையை நிர்ணயம் செய்தார். அவர் செய்த சகல மாலைகளும் ஒரு சில நாட்களில் விற்பனை செய்யப்பட்டன. இதன் மூலம் சிப்பியைக் கொண்டு கழுத்தணி தயாரிக்கும் தொழிலை ஆரம்பித்தார். தனது தொழிலுக்கு நல்ல வரவேற்பு காணப்படுவதால் கடற்கரையில் இருந்து சிப்பிகளை கொண்டு வருவதற்கு நபர் ஒருவரை நியமித்தார். இவ்விதம் தனது கழுத்தணி வியாபாரத்தை சிறப்பாக கொண்டு சென்றார். அதன் பின்னர் மாகஸ் தனக்கென்று ஒரு படகை சொந்தமாக வாங்கினார். இந்த படகைப் பயன்படுத்தி நீண்ட தூரத்தில் உள்ளவர்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்து அதற்கு மாற்றீடாக சிப்பிகளை வாங்கி வந்தார். படிப்படியாக அவர் கழுத்தணி உற்பத்தி மேலதிகமாக எரிபொருள் வியாபாரத்தையும் ஆரம்பித்தார். இந்த இரண்டு தொழில்களையும் சிறப்பாக மேற்கொண்டு வந்தார். அதன் பின்னர் கழுத்தணி தொழிலை முற்று முழுதாக கைவிட்டு எரிபொருள் விற்பனையில் முழுமையாக ஈடுபட்டார். இந்தத் தொழில் மிகக்குறுகிய காலத்தில் பாரிய வளர்ச்சி பெற்றதுடன் பல கப்பல்களுக்கும் சொந்தக்காரரானார். இறுதியில் சிறந்த வியாபாரியாக மாகஸ் மாற்றமடைந்தார்.

இந்த கைத்தொழிலானது இங்கிலாந்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் சீனா போன்ற ஆசிய நாடுகளிலும் இந்த உற்பத்தி விரிவடைந்ததுடன் சர்வதேச வியாபாரமாகவும் மாற்றடைந்தது. தனது உற்பத்தி தொடர்பில் தொடர்ந்து சிந்தித்த காரணத்தினாலும் அதனை பாரிய வியாபாரமாக மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் செயற்பட்டதுமே இதற்கான காரணமாகும். மாகஸ் சாமுவேல் என்ற பெயர் உங்களுக்கு தெரியாத, அறிந்திராத பெயராக காணப்பட்டாலும் அவரால் நிர்மாணிக்கப்பட்ட வியாபார இலட்சினை என்றும் மனதில் இருந்து மாற்றமடையாது என்பது திண்ணம். அவருடைய வியாபாரமான “ஷெல்” என்பதாகும். அதாவது உலகப் பிரசித்தி பெற்ற ஷெல் நிறுவனமாகும். ஷெல் என்பது கடல் சிப்பிகளுக்கு பயன்படுத்தும் பெயராகும். ஷெல் என்ற பெயர் உலகளவில் பிரசித்தி பெறுவதற்கு காரணமாக இருந்தமைக்கான காரணத்தை தெளிவுபடுத்திய அவர் சிப்பியின் மூலம் அவருடைய வாழ்க்கையில் பாரிய மாற்ற மொன்று ஏற்பட்டதை நினைவு கூறும் வகையிலேயே இந்தப் பெயரை தெரிவு செய்ததாக குறிப்பிட்டார். இதுவே தனது வாழ்க்கையில் திருப்பு முனை என்பதையும் அவர் வலி யுறுத்தினார். தனது முதலாவது உற்பத்தியை என்றும் நினைவு கூறும் வகையில் செயற்பட்ட அவர் அதனையே தனது இலட்சினையாகவும் பயன் படுத்தினார். இவ்விதம் உலகப் பிரசித்தி பெற்ற ஷெல் வியாபாரம் உலகத்துக்கு அறிமுகப் படுத்தப் பட்டது உலகில் தொழிலின்றி பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த தன்னம்பிக்கை யுடைய இளைஞர் ஒருவரி னாலாகும். மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து உலகத்துக்கு முன்மாதிரியாக மாறிய மாகஸ் படைப்பாக்கத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டமையாலாகும். இதன் மூலம் கையில் ஒரு சதம் பணமில்லாமல் சுற்றித்திரிந்த இளைஞருக்கு தமது வாழ்க்கையை வெற்றிப் பயணத்துக்கு இட்டுச் சென்றது படைப்பாக்கத் திறனாகும். நீங்களும் உங்கள் வாழ்க்கையின் திருப்பு முனையை அடையாளம் காண முயற்சி செய்யுங்கள். உடனடியாக அந்த திருப்பு முனையை அடையாளம் கண்டு அந்த வழியில் பயணிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் சரியான பாதையில் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள். அது ஒரு போதும் தவறாக மாட்டாது. உங்கள் வாழ்க்கையின் திருப்பு முனையை நீங்களே தெரிவு செய்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசித்தி பெற்ற நபராக விளங்குவதற்கு இன்றே அடித்தளம் இடுங்கள்.


பிரேமசிறி கமகே
தலைவர்
கைத்தொழில் அபிவிருத்தி மத்திய நிலையம்







# அன்றாட வாழ்வை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கும் நன்மக்கள் வாழும் நாட்டின் சகல பிரதேசங்களிலும். . .

## எச்.என்.பி.கிராமின் விளம்பரம் செய்யப்பட்ட விதம்

கண்டலம குளத்துக்கு காலை வேளையில் சூரிய வெளிச்சம் அஸ்தமித்த சந்தர்ப்பம் மாத்திரமே. இலைகளும், குலைகளும் மௌனமாக தொடர்ந்தும் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் பசுமாட்டின் கதறல் சத்தம் இரைச்சலை ஏற்படுத்தியது. கரு மேகம் சூழ்ந்துக் கொண்டிருந்த காலை வேளையில் பசுமாட்டின் பால் கறக்கும் பால்காம்புகள் பாலை சுரக்க ஆயத்தமாக இருக்கும் போது மனிதன் தனது நாளாந்த செயற்பாடுகளை ஆரம்பிக்க பசுமாட்டில் இருந்து பாலை கறக்கின்றான். அவ்விதம் கறக்கப்பட்ட பாலை தன்னிடமிருந்த வாகனமான துவிச்சக்கர வண்டியின் பின்புறத்தில் வைத்துக் கொண்டு சூரிய வெளிச்சத்தினால் புற்தரையில் காணப்பட்ட பனித்துளிகள் கால்களில் படுமாறு கணவர் நடந்து செல்கிறார்.

கட்... கட்... அவசரமாக நிலான் குரேயின் குரல் சகலரின் பார்வையையும் திசைதிருப்பியது.






சூரியன் மறைவதற்கு சொற்ப விநாடிகள் இருக்கும் இந்த நேரத்தில் நாங்கள் கண்டலம குளத்துக்கு அருகாமையில் எச்.என்.பி.கிராமின் புதிய பிரசார விளம்பர படப்பிடிப்பை பார்வையிட்டவாறு இருக்கிறோம். ஊடகங்கள் ஊடாக நீங்கள் இக்காலப்பகுதியில் கேட்டும் பார்த்தும் இரசித்துக் கொண்டிருக்கும் விளம்பரத்தின் ஒரு படக்காட்சி முடிவடையும் சந்தர்ப்பத்தில், இந்த படக்காட்சிகளை காட்சிப்படுத்திய விதம் தொடர்பில் ரொட்ஸ் என்ட் ரொட்ஸ் விளம்பர சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தயாரிப்பாளரும் பணிப்பாளருமான மாதவ விக்ரமசிங்கவிடம் எனது பார்வையை செலுத்தினேன். அடுத்த படக்காட்சிக்கான திட்டமிடல்களை செய்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மாதவ தன்னால் படைக்கப்பட்ட படக்காட்சி தொடர்பில் இவ்விதம் கருத்துக்களை எம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

பலகாலமாக பிரைம் கிராமின் என்ற பெயரில் இயங்கிவந்த கிராமின் நிறுவனம் எச்.என்.பி.வங்கியுடன் இணைந்த பின்னர் அந்த நிறுவனத்தின் புதிய போக்கு, நவீன செயற்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்ற தேவை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சமிந்த பிரபாத்துக்கு ஏற்பட்டது. இவ்வளவு காலமும் இலங்கையின் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு நிதி உதவிகளை வழங்கிய அவர்களின் கைத்தொழில் மேம்பாட்டுக்கு பங்காற்றியதுடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு கிராமின் நிறுவனம் வழங்கிய உயரிய சேவைகளை இந்த விளம்பரங்களின் ஊடாக வெளிப்படுத்துவதே எனக்குள்ள பாரிய சவாலாகும் என்று தெரிவித்தார். இந்த தொனிப்பொருளை அடிப்படையாக வைத்து அச்சு ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்ட சிறிய கவிதையொன்றான,

அன்றாட வாழ்வை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கும்

நன்மக்கள் வாழும் நாட்டின் சகல பிரதேசங்களிலும்

பிரகாசித்து வாழ்க்கையில் மேம்பாடு அடைய

நாம் கைகொடுத்து- வெற்றியையும் கொடுப்போம்

30 விநாடிகள் கொண்ட இந்த விடயத்தை எமக்கு விளம்பரமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. இதற்காக நாம் பசு மாடு வளர்ப்போர், .சகலவிதமான கைத்தொழில்களிலம் ஈடுபடுவோர், மட்பாண்டம் உற்பத்திகள் செய்பவர்கள், ஆடைத்தொழிலாளர் ஆகிய நான்கு துறைகளைச் சோந்தவர்களையும் இணைத்துக் கொண்டு ஒவ்வொரு துறையிலும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு தமது கைத்தொழிலை சிறிதாக ஆரம்பித்து பாரிய அளவில் வளர்ச்சியடைவதைப் போன்று எமது படக்காட்சிகள் படைக்கப்பட்டுள்ளன. எச்.என்.பி.கிராமின் நுண்நிதியினால் அவர்களின் கைத்தொழில் எவ்விதம் வளர்ச்சியடைந்தது என அந்த விளம்பரத்தை பார்ப்போர் அறிந்து கொள்ளக்கூடியதாக காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

எனது படப்பிடிப்பு பிரதிகள் அச்சு ஊடகங்களில் ஒளிபரப்பும் உரிமையை ஸ்கை என்டர்டைன்மென்ட்டின் நிலான் குரே அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு மிகவும் சிறப்பாக ஒளிபரப்பப்பட்டது. இசையமைப்புக்கு உதவிய கிராமிய இசையுடன் கலந்த முற்றிலும் வேறுபட்ட இசையுடனான பாடலை தயாரித்து பாடியவர் அமில நிதஹஸ திஸாநாயக்க. படப்பிடிப்பு உதவிகள் அனைத்தும் ஸ்கை என்டர்டைன்மென்ட்டின் படைப்பாளர்களினால் படமாக்கப்பட்டது. நான் முதலில் சிங்களத்தில் எழுதிய பிரதிகளை தமிழ் மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்தவர் ரமேஷ் சண்முகநாதனாகும். ஏனெனில் எமக்கு சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளதாலாகும். தம்புள்ளை, சீகிரிய ஆகிய பிரதேசங்களில் தான் இந்த இரண்டு நாட்களும் படிப்பிடிப்பு செய்யப்பட்டது. எச்.என்.பி.கிராமின் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்களின் சார்பில் எச்.என்.பி.வங்கியின் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முகாமையாளர் உபுல் அதிகாரி அவர்கள் உட்பட கிராமின் ஊழியர்கள் மேற்பார்வையில் இந்த விளம்பரம் மிகவும் சிறப்பாக ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

HNB GRAMEEN மெஹெவர

தொழிலும் . . . வாழ்க்கையும் சமாந்தரமாக பயணிக்கும் எங்கள் வாழ்க்கை அனுபவத்தை சுவாரஸ்யமாக வெளிப்படுத்தும் பத்திரிகை. . .

அடுத்த வாரம் முதல் புதுப்பொழிவுடன் உங்கள் கரங்களில் . . .

# HNB கிராமின் கிளையின் செயற்பாடுகள்

நாட்டுக்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்வதற்காக உழவர்களின் வியர்வைத் துளியினால் உருவாக்கப்பட்ட பாரிய குளங்களும் ஓர் அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான மைய இடமாக குருநாகல், கல்கமுவவை கூறினால் அது மிகையாகாது. வரலாற்று சிறப்புமிக்க யாப்பகூவ இராஜதானி ஆட்சி செய்த, நவீன மாவட்டத்தின் எல்லை நிர்ணயத்தில் குருநாகலை மாவட்டத்திற்குரிய கல்கமுவ, கிராமிய மண்வாசனை கொண்ட பிரதேசமாக இன்றும் திகழ்வதற்கு அம்மக்களின் சுயநலமற்ற உழைப்பு காரணமாகும். அவ்வாறான பிரதேசமொன்றில் புத்தாண்டுக்கு முன்பிருந்து தனது சேவையை வழங்கி வரும் எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனம் கல்கமுகவ கிளையை சுபநேரத்தில் ஆரம்பித்தமை தொடர்பில் இம்முறை எமது மெஹெவர சஞ்சிகையின் கிளை செயற்பாடுகள் பகுதியின் ஊடாக கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கிறோம். கல்கமுவ கிளையின் செயற்பாடுகள் தொடர்பில் அதன் முகாமையாளர் நுவன்குமார அவர்கள் தெரிவித்த கருத்து கீழே தருகின்றோம்.

எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் கிளை வலையமைப்பில் 40ஆவது இடத்தில் இருக்கும் கல்கமுவ கிளை எச்.என்.பி. கிராமின் கிளை வலையமைப்பில் 2006ஆம் ஆண்டில் இணைந்து கொண்டது. அன்று இருந்து இன்று வரையான காலப்பகுதி வரை இப்பிரதேசத்தில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு எமது சேவையை பெற்றுக்கொடுக்க முடிந்தது. கல்கமுவ என்பது இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கும் பிரதேசமாக அறிமுகப்படுத்த முடியும். விசேடமாக தர்பூசணி, வட்டக்காய், வெண்டிக்காய், பாசிப்பயறு, கௌபி, போன்ற தானியங்கள் இப்பிரதேசத்தில் பாரிய அளவில் பயிரிடப்பட்டுள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறே, பிரதேச ரீதியிலும் ஒவ்வொரு பயிர்ச்செய்கைக்கு பெயர் பெற்ற இடமாக காணப்படுகின்றது. விசேடமாக களிமண் சட்டியைப் போன்று களிமண்ணில் தயாரிக்கப்படும் உற்பத்திகளுக்கு கெலேகம, பாலுகம ஆகிய பிரதேசங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவையாகும். மெதகம, தம்புத்தேகம ஆகியன காளாண் பயிர்ச்செய்கைக்கும் பசும்பால் உற்பத்திக்கும் வாழை பயிர்ச்செய்கைக்கு மீஓய பிரதேசமும், கால்துடைப்பு, ஈக்கில், தும்புத்தடி, பஞ்சு ஆகிய உற்பத்திகளுக்கு எகட்டுவாவ பிரதேசமும் பிரயல்யம் பெற்று விளங்குகின்றது.

எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் கல்கமுவ கிளை 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேல் அரசங்வெவ, கல்கமுவ என்ற முகவரியில் ஸ்தாபிக்கப்பட்ட கல்கமுவ கிளை, 2013ஆம் ஆண்டு இல. 349, அநுராதபுர வீதி, கல்கமுவ என்ற முகவரியில் புதிய கட்டிடத்தில் செயற்பாடுகளை எமது வாடிக்கையாளர்களின் வசதி கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கல்கமுவ நகரில் இருந்து பல பிரதேசங்களுக்கும் தனது சேவையை வழங்கி கல்கமுவ கிளையானது இன்று வரை பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் எமது நிதி நிறுவனத்தில் கொடுக்கல்வாங்களை செய்து வருகிறார்கள். விசேடமாக எமது மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள பிரதேசங்களான கல்கமுவையில் இருந்து குருநாகலை வீதியின் ரிதிபெத்தி எல்ல வரையும், அநுராதபுரம் பகுதியில் கல்கமுவையில் இருந்து தலாவ கல்நேவ வரையும், புத்தளம் வீதியில் ராஜாங்கணை 15 வரையும், குருநாகலை பகுதியில் பொல்பிதிகம வரையில் சுமார் 122 மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக சிறு கைத்தொழிலுக்காக எமது நிறுவன அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

எமது அங்கத்தவர்கள் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அந்த வியாபாரத்தை நடத்துவதற்கும் அவர்கள் புதிதாக விற்பனை நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கும் தேவையான கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களுக்கு இலவச ஆலோசனை சேவையையும் நாம் வழங்கி வருகின்றோம். இன்று வரையில் எமது கிளையின் ஊடாக 2854 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் வியாபார முன்னேற்றத்துக்காக 409மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# எமது பயண வெற்றியின் பங்குதாரர்களாக அவர்கள் விளங்கியமை போற்றுவதற்குரியது...

## எச்.என்.பி.கிராமின் கல்கமுவ கிளை

எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சேமிப்பு திட்டம் மற்றும் சுவசக்தி, அபிலாஷ மற்றும் ஈசிலோன் ஆகிய கடன்களும் இக்கிளையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அங்கத்தவர்களுக்கு நாளாந்தம் இடம்பெறும் செலவுகளை ஈடு செய்யும் வகையில் உடனடியாக வழங்கப்படும் “இலகு கடன்” திட்டத்தின் கீழ் எமது அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி செயற்பாட்டுக்கு தேவையான செலவுகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. இதன் கீழ் கடந்த காலத்தில் மாத்திரம் 47 மில்லியன் ரூபா அங்கத்தவர்களுக்கு இலகுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் அங்கத்தவர் மற்றும் கடன் காப்புறுதி நிதியத்தின் கீழ் மரணாதார கொடுப்பனவாக 335000ரூபாவையும் நாம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்றைய தினத்தை விட எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் நினைப்பதுண்டு. அந்தக் கனவை நனவாக்குவதற்காக சகல பெண்களும் பல்வேறு தியாகங்களை செய்வார்கள் என்பது திண்ணம். அதற்காக அவர்களுக்கு நாம் கைகொடுத்து, வழியேற்படுத்திக் கொடுப்பதன் மூலம் தைரியமாக முகம் கொடுத்து வெற்றி பெற ஒரு நாளும் பின்வாங்குவதில்லை. இதுவே நாம் கடந்த பதினைந்து வருட சேவையில் பெற்றுக் கொண்ட அனுபவமாகும். நுண் நிதித்துறையில் முன்னணியில் திகழும் நிறுவனமான எமக்கு, வாழ்க்கையில் வெற்றி பெற்ற குடும்பங்களை உருவாக்கிய பெருமைக்குரிய பங்குதாரர்களாக இன்றும் திகழ்கின்றோம். எவ்வளவு நிதி நிறுவனங்கள் தோன்றினாலும் அவர்களுக்கு “எச்.என்.பி.கிராமின்” நிறுவனம் “எமது கிராமினுடன்” இணைந்து கொள்வதற்கு அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் “எமது சேர்” என அழைப்பதற்கு அவர்கள் உண்மையாக சேவையாற்ற “எச்.என்.பி.கிராமின்” நிறுவனத்துக்கு முடியும் என்பதாலாகும்.




எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனம், இல. 349, அநுராதபுரம் வீதி, கல்கமுவ

தொலைபேசி – 037 2253720
மின்னஞ்சல் - galgamuwa@hnbgrameen.lk

### எச்.என்.பி. கிராமின் கல்கமுவ கிளை அலுவலக உத்தியோகத்தர்கள்

**பிரதேச முகாமையாளர்**
அமில ஹேரத்
**பிரதேச கணக்காளர்**
ரணில் பிரசாத்
**கிளை முகாமையாளர்**
நுவன் குமார
**உதவி முகாமையாளர்**
நிலந்த குமார
**நிதிப்பிரிவு பிரதானி**
துமிந்த சம்பத்
**வெளிக்கள முகாமையாளர்**
சூலங்க ரத்னபால
**கணக்கு உதவியாளர்**
பிரியலால் சமிந்த
**கணக்கு உதவியாளர்கள்**
பிரதீப் ஏகநாயக்க
அனுராத சமரக்கோன்
**வெளிக்க நிறைவேற்று**
நந்தன சரத்
உபுல் ரோஹித்த
சஜித் தர்ஷன
மாதவ பிரேமரத்ன
நிஷால் விதுசிக
நிஷாந்த குமார
இஷான் ரணசிங்க
சந்துன் ராஜபக்ஷ
**சேமிப்பு நிறைவேற்று**
தில்ருக்ஷ பிரேமரத்ன



எச்.என்.பி.கிராமின் நிறுவன கல்கமுவ கிளை உத்தியோகத்தர்கள்

ஆக்கம் - மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க



அமில ஹேரத்
**பிரதேச முகாமையாளர்**



ரணில் பிரசாத்
**பிரதேச கணக்காளர்**



நுவன் குமார
**கிளை முகாமையாளர்**



நிலந்த குமார
**உதவி முகாமையாளர்**



துமிந்த சம்பத்
**நிதிப்பிரிவு பிரதானி**



சூலங்க ரத்னபால
**வெளிக்கள முகாமையாளர்**

# நாம் மீண்டெழுவதற்கான சக்தியாக இருந்தது கிராமின் நிறுவனம் என்றால் அது மிகையாகாது






நான் திருமணம் முடிப்பதற்கு முன்னர் இருந்தே எனது கணவர் ஹோட்டல் தொழிலை செய்து வருகிறார். பல்வேறு பிரச்சினைகள் காரணமாக இந்த ஹோட்டலின் வியாபாரம் சற்று வீழ்ச்சியடைந்தது. நான் 2006ஆம் ஆண்டு கிராமின் நிறுவனத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். எமது ஹோட்டலை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஹோட்டல் வியாபாரத்துக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்திலும் நான் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். நாம் மீண்டெழுவதற்கான சக்தியாக இருந்தது கிராமின் நிறுவனம் என்றால் அது மிகையாகாது. நான் தற்போது இரண்டு இலட்சம் கடனைப் பெற்றுள்ளேன். அம்பன் பொல நகரில் காணப்படும் ஒரேயொரு ஹோட்டலான சுமிஹிரி ஹோட்டல் உட்பட நகரத்தில் சி.டி. விற்பனை நிலையமும், லொத்தர் சீட்டு விற்பனை நிலையமொன்றும் எனக்கு இருக்கிறது. அவ்வாறு இரண்டு முச்சக்கர வண்டிகளில் எமது ஹோட்டலில் தயாரிக்கப்படும் தின்பண்டங்கள் நகரில் உள்ள ஏனைய ஹோட்டல்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. எனது விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எச்.என்.பி. கிராமின் பல வழிகளில் உதவிகளை வழங்கியது. இன்று நான் அம்பன்பொல கிராமின் மத்திய நிலையத்தில் தலைவியாக இருப்பதற்கு எனது வியாபாரத்தின் மீதும் எனது வர்த்தக நிலையங்கள் மீதும் வைத்துள்ள அதீத நம்பிக்கையின் காரணத்தினாலாகும்.

ஏ.எம்.கே. மெனிகே, சுமிஹிரி ஹோட்டல், அம்பன்பொல

## வியாபாரத்தை நல்ல நிலையில் வைத்திருப்பதற்காக நான் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன் . . .





பப்படம் எமது உணவின் பிரதான உணவாக கருதப்படுகிறது. பப்படம் சாப்பிடுவதற்கு இலகுவாக இருப்பதுடன், ருசியான உணவாக இருந்தாலும் அதனை உற்பத்தி செய்வதற்கு ஒரு படிமுறை காணப்படுகின்றது என்பது பீ.ஜி. தேவிகா சாந்தனியின் பப்படம் உற்பத்தியை அவதானித்த போது எமக்கு அறிந்து கொள்ள முடிந்தது.

பெஸ்ட் பப்படம். இது அவருடைய உற்பத்தியின் பெயர். சரியான தரங்களுடன் உற்பத்தி செய்யப்படும் பப்படம், சரியான அளவில் மா கலவையும் இடப்பட்டே உற்பத்தி செய்யப்படுகின்றது. பல்வேறு படிமுறைகளின் பின்னரே பப்படம் உற்பத்தி செய்யப்படுவது இந்தக் உற்பத்தியைப் பார்க்கும் போது எமக்கு புலனாகிறது. பப்படம் உற்பத்தியின் இறுதி நிகழ்வாக பப்படத்தை சிறிது நேரம் காய விடுவதற்காக தேவிகா அந்த இடத்தில் இருந்து எழும்பியவுடன் பப்படம் உற்பத்தி தொடர்பில் எமக்கு தெரிவித்த சில தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

“நான் சுமார் ஒன்பது வருடங்களாக செய்து வருகின்றோம். ஆரம்பத்தில் நாங்கள் இருவரும் இணைந்தே இந்த உற்பத்தியை செய்து வந்ததுடன் படிப்படியாக இதனை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்ற நோகத்தில் செயற்பட்டு வந்தோம். நான் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் எமது வியாபாரத்தை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். ஆரம்பத்தில் 25,000ரூபாவுடன் ஆரம்பித்த எமது கொடுக்கல் வாங்கல் நாளடைவில் ஒரு இலட்சம் ரூபா கடனைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு மாற்றமடைந்துள்ளேன். எமது உற்பத்திகளுக்கு நல்ல கேள்வி காணப்படுகின்ற போதிலும் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கான ஊழியர் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக காணப்படுகிறது. எவ்வாறாயினும் எமது முயற்சியை இந்தளவுக்கு கொண்டு வருவதற்கு எச்.என்.பி. கிராமின் நிறுவனம் வழங்கி வரும் பங்களிப்பு சிறப்பானது”

பீ.ஜி. தேவிகா சாந்தனி
கனன்கமுவ, மீகலேவ.

## கிராமின் நிறுவனம் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை தொடர்ந்து பாதுகாப்பதே எமது நோக்கமாகும் . . .



சுப்பர் மார்க்கட்டுகளில் பிரசித்தி பெற்ற பொருளாக விற்பனை செய்யப்படும் தயிருக்கு தேவையான சட்டியை உற்பத்தி செய்து வரும் பெண்ணொருவரை கல்கமுவ, ஹபுகும்புர பிரதேசத்தில் நாம் சந்தித்தோம். அவர்களினால் தயாரிக்கப்பட்டதும் சந்தையில் பிரசித்தி பெற்ற இயந்திரங்கள் பலவற்றைப் பயன்படுத்தி தயிர் சட்டிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு நாளைக்கு சுமார் 2500இற்கும் மேற்பட்ட தயிர் சட்டிகள் உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் குமுதினி ஜயகொடிக்கு இருக்கின்றது. நாங்கள் அவருடைய கைத்தொழில்சாலையில் தயிர் சட்டிகளை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போதே சந்தித்தோம்.

நான் ஆறு, ஏழு தடவைகள் கிராமின் கடனைப் பெற்று உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியுள்ளேன். நான் ஒருபோதும் பெரியளவில் கடனைப் பெறவில்லை. தேவையான போது தேவையான அளவுக்கு மாத்திரம் கடனைப் பெற்று மீளச் செலுத்தியுள்ளேன். கிராமின் அங்கத்தவர்களான எம்மீது எச்.என்.பி.கிராமின் அசையாத நம்பிக்கை வைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து பாதுகாக்கவே நாம் விரும்புகிறோம். என்னிடம் ஆறு பேர் தொழில் புரிகின்றனர். நிறுவனமொன்று எம்மிடம் தயிர் சட்டிகளை வாங்குவதால் எமக்கு விநியோகம் செய்வதற்கான பிரச்சினைகள் இல்லை. நாம் மாதாந்தம் 40,000இற்கும் மேற்பட்ட தயிர் சட்டிகளை உற்பத்தி செய்கிறோம். நாம் இந்த இடத்துக்கு வருவதற்கு வழியேற்படுத்திக் கொடுத்த கிராமின் கடன் திட்டம் தொடர்பில் பெருமை அடைவதுடன் கல்கமுவ கிராமின் கிளை உத்தியோகத்தர்களுக்கு எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குமுதுனி ஜயக்கொடி**
**ஹபுகும்புற,கல்கமுவ.**

## எச்.என்.பி. கிராமின் நிறுவன வாராந்த தவணைக்கட்ட முறை மிகவும் சுலபமானது



மெதகம மற்றும் தம்புத்தேகம பிரதேசங்களை பிரிக்கும் எல்லையில் காணப்படும் பாலத்திற்கு மறு பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடைத்தொகுதிகளை அங்கு செல்பவர்களும் வருபவர்களும் மிகவும் ஆர்வத்துடன் பார்வையிடுவார்கள். அந்த கடைத்தொகுதியின் 116ஆவது கடைத் தொகுதியின் உரிமையாளர் மல்காந்தி மேரியன் பீரிஸ் என்பவராகும். எச்.என்.பி. கிராமின் நிறுவனத்துடன் உறவுகள் தொடர்பில் பின்வருமாறு கருத்துக்களை தெரிவித்தார்.

நான் இந்த பழக்கடையை ஆரம்பிக்க முன்னர் காளான் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தேன். இன்றும் அந்தத் தொழிலை தொடர்ந்து செய்து வருவதுடன் பழக்கடையையும் நடாத்தி வருகின்றேன். நான் 2006ஆம் ஆண்டு கிராமின் நிறுவனத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். கலேவல கிளையின் மூன்றாவதாக ஆரம்பிக்கப்பட்ட மெதகம மத்திய நிலையத்தின் தலைவியாகவும் நான் செயற்பட்டு வருகின்றேன். வியாபாரமொன்றை நடாத்தும் போது ஏற்படக்கூடிய நிதிப் பிரச்சினைகளுக்கு சகல சந்தர்ப்பங்களிலும் எமக்கு எச்.என்.பி. கிராமின் பாரிய சக்தியாக விளங்கியது. இந்த நிறுவனத்தின் வாராந்த தவணைக் கட்டண முறை மிகவும் சுலபமானது. எனக்கு மிகவும் விருப்பம். ஏனெனில் எமக்கு தெரியாமலேயே கடனை திருப்பிச் செலுத்தக்கூடியதாக இருப்பதாலாகும்.

மல்காந்தி மேரியன் பீரிஸ்
மெதகம,
மஹகல்கடவல

## Micro Finance எண்ணக்கரு சிறப்பு பார்வை



பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

# கடன் பெறுமானம் மற்றும் கடனுக்கான விண்ணப்பப்படிவம்

### பகுதி 1

தற்போதைய சமூக கட்டமைப்பில் கடனைப் பெற்றுக் கொள்வதற்கான பிரசாரமாக திகழ்வது இதற்கு முன்னர் கடனொன்றைப் பெற்றிராத ஒருவருக்கு கடன் வழங்குவதாகும். இதனால் தான் கடனைப் பெற்றுக் கொள்ள சிறந்த இடமொன்றைத் தேர்ந்தெடுக்க விண்ணப்பதாரிகள் முயற்சி செய்யும் போது தமது நிறுவனத்தின் கொள்கைகள், சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப கடனை வழங்க விண்ணப்பதாரிகளை ஊக்குவிக்கும் நிதி நிறுவனங்கள் போட்டி நிறுவனங்களுக்கு மத்தியில் அதனை அடைந்து கொள்வதாகும். இதனடிப்படையில் கடன் பெறுதல் மற்றும் கடனை வழங்குதல் ஆகியன போட்டிக்கு மத்தியில் இடம்பெறுகின்றது என்பதை விவாதித்தால் அது பிழையில்லை என்றே கூற வேண்டும்.

அநேகமாக கடனை வழங்குவதற்கு முற்படும் அதேவேளையில் வழங்கப்படும் கடனை மீண்டும் பெற்றுக் கொள்வதில் அவதானமாக இருக்க வேண்டுமென்பதுடன் நிதி நிறுவனங்கள் எதிர்நோக்கும் பாரிய சவாலாகவும் இது காணப்படுகின்றது. இதில் கடன் பெற்றுக் கொண்ட நபர் திறன்மிக்கவராக இல்லையா என்பதை தேர்ந்தெடுப்பது நிதி நிறுவனத்தின் பொறுப்பாகும். இவ்விதம் கடன் பெறுபவரை அடையாளம் கண்டு கடனை மதிப்பீடு செய்வது ஒரு பகுதியாகும். இதில் பொறுப்புக்கள் அனைத்தும் கடன் வழங்கிய நபரையே சாரும்.

### கடன் பெறுமானம் மற்றும் கடன் பெறுபவரை அடையாளம் காணல்

தமது நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படும் கடன் தொடர்பில் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் நபருக்கு அறிவுறுத்தல் மற்றும் அதனூடாக கடன் பெறுபவரினால் கடனுக்கு விண்ணப்பிப்பது ஆகியன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. கடனைப் பெற்றுக் கொள்ளும் குழு, கடன் அளவு, வட்டி வீதம், எதிர்பார்க்கும் தகைமை என்பன தொடர்பில் உண்மையான தகவல்களை கடன் பெறுபவர் வழங்க வேண்டுமென கடன் பெறுமானம் வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகிறது. இதில் தெரிவு செய்யப்பட்ட குழுவை சரியாக அடையாளம் காணல் மற்றும் அவர்களுக்கு சரியான தகவலை வழங்கி கடன் பெறுமான அளவை திட்டமிடல் அவசியமாகும். பெறுமான அளவை தேர்ந்தெடுக்க கூடுதலான பணத்தை செலவிடுதல் மற்றும் அதனை அடையாளம் காணப்பட்ட குழுவுக்கு சரியான முறையில் வழங்கு முடியாமை ஆகியன காலம் மற்றும் பணத்தை வீண்விரயம் செய்வதற்கு சமனாகும். இதனடிப்படையில் அந்தந்த கடனுக்கு ஏற்ப உள்ளீடு செய்து கடன் பெறுமானத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். அவற்றை நாம் இவ்விதம் அடையாளம் காணலாம்.

### நேரடி கடன் வழங்கும் செயற்பாடு
### (Direct Promotion)

கடன் வகைகளுக்கு ஏற்ப நேரடியாக கடன் வழங்கக்கூடிய நபர்களை அடையாளம் கண்டு அவர்களிடம் சென்று வழங்கப்படும் கடன்களை நேரடி கடன் வழங்கும் செயற்பாடு எனலாம்.

### மறைமுகமாக கடன் வழங்கும் செயற்பாடு
### (Indirect Promotion)

இலத்திரணியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஊடாக விளம்பரப்படுத்தி வழங்கும் செயற்பாட்டை இது குறிக்கும். அதிக செலவில் செய்யப்படும் திட்டமாக கருதப்படும் இந்த முறையானது கடன் பெறும் சகல நபர்களிடமும் தகவல் சென்றடைந்துவிட்டதா என்பதை தீர்மானிப்பது மிகவும் கடினமாக விடயமாகும்.

### கூட்டு கடன் வழங்கும் வேலைத்திட்டம்
### (Cluster Promotion)

அந்தந்த குழுக்களை அடையாளம் கண்டு அந்தக் குழுக்களுக்கு அறிவுறுத்தும் வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடனைக் குறிக்கும். இதில் விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் போன்றோரை இலக்காகக் கொண்டு கூட்டாக கடன் வழங்குவது தொடர்பில் அறிவுறுத்துவதாகும்.

### வாடிக்கையாளர்கள் ஊடான கடன் வழங்கும் செயற்பாடு
### (Client to Client Promotion)

நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் ஊடாக அறிமுகமான நபர்களுக்கு தமது கடன் தொடர்பில் அறிவுறுத்தி அவர்களை தங்களது வாடிக்கையாளர்களாக இணைத்துக் கொள்ளும் செயற்பாட்டை வாடிக்கையாளர்கள் ஊடான கடன் வழங்கும் செயற்பாடு எனலாம்.

### வியாபார நிறுவனங்கள் மூலமாக நடைபெறும் கடன் வழங்கும் செயற்பாடு
### (Business to Client Promotion)

தமது நிறுவனத்துடன் தொடர்புடைய குழுக்களுடன் நேரடியான தொடர்பினை பேணிவரும் வியாபார நிறுவனங்கள் ஊடாக அவர்களின் வாடிக்கையாளர்கள் தகவல்களைப் பெற்றுக் கொண்டு வழங்கப்படும் கடன் செயற்பாட்டைக் குறிக்கும். உதாரணமாக குறிப்பிடுவதாயின், உர உற்பத்தி நிறுவனத்தின் வாடிக்கையாளர்களான விவசாயிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொண்டு அந்த விவசாயிகளுக்கு கடன் வழங்கும் வேலைத்திட்டத்தை இது குறிக்கும். இதன் மூலம் அந்த விவசாயிகளின் செயற்பாட்டை ஊக்குவிக்க முடியுமெனவும் இதன் மூலம் உர உற்பத்திகளை விவசாயிகளுக்கு இலகுவாக சந்தைப்படுத்த கூடியதாகவும் இருக்கும்.

இவ்விதமான விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளால் கடன் பெறும் நபர்களை அடையாளம் கண்டு அவர்களை தமது வாடிக்கையாளர்களாக மாற்றியமைக்கும் போது கடன் வழங்கும் நிதி நிறுவனம் மற்றும் கடன் வழங்கும் உத்தியோகத்தர் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள் பல உள்ளன. இது தொடர்பில் அடுத்த வார இதழில் நாம் குறிப்பிட உள்ளோம்.





# கிராமின் சக்தி

# அவரின் வளர்ச்சி

கணவர் மற்றும் அவருடன் கடமையாற்றும் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பூச்சாடி, சீமேந்து நாட்காலி, கிரில் வேலைகள், கொங்கிரீட் தூண்கள், சுவருக்கு பதிக்கும் டைல்ஸ்கள் என்பனவும் சீமேந்தியைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள் பல வீட்டு முற்றத்தின் ஒரு பகுதியில் காணப்பட்டன. தமது பிள்ளைகள் இருவரும் சீமேந்து நாட்காலியில் அமர்ந்து கொண்டு டுவிட்பேர்ட் பறவைகளை அலங்காரம் செய்து கொண்டிருந்தாலும் அதற்கு வர்ணம் தீட்டுவது நிஷாந்தியினாலாகும். குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த வேலைத்தளத்தை நடாத்திச் செல்வதுடன் "பியுமி கொங்கிரிட் வேர்க்ஸ்" என்ற பெயரில் தனது வியாபாரத்தை நடத்திச் செல்வதை நாங்கள் தடித்த எழுத்தில் வீட்டிற்கு முன்பு பெயரிடப்பட்டுள்ள பெயர் பலகையை பார்த்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. வீட்டின் முற்புறத்தில் சகல இடங்களிலும் பரந்து காணப்பட்ட கொங்கிரீட் உற்பத்திகளுக்கு மத்தியில் நடந்து சென்றதுடன் அந்த செயற்பாடுகளை பார்வையிட்டவாறு மணல், சீமேந்தி, கருங்கற்கள், கொங்கிரீட்கற்களுடன் அவர்களது நாளாந்த வாழ்க்கை கடந்து கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறே, தான் கடந்து வந்த கரடு முரணான வாழ்க்கையின் கடந்த கால அனுபவங்களை தொடர்பாக எம்முடன் பகிர்ந்து கொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுத்தோம். எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நிஷாந்த சமுத்ரா குமாரி மற்றும் அவருடைய கணவர், புதல்விகள் தங்களது வாழ்க்கை தொடர்பாக இவ்விதம் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.



**எமது வாழ்க்கையை புதிய வழியில் அழைத்துச் சென்றமை எதிர்பாராத சம்பவமாகும்**

**நிஷாந்தி சமுத்ரா குமாரி எச்.என்.பி.கிராமின், கல்கமுவ கிளை**

எனது சொந்த கிராமம் பொத்துவெவ. சகோதர, சகோதரிகள் நால்வர் கொண்ட குடும்பத்தில் நான் இரண்டாமவர். பதுளை, வன்னிநாயக்க தேசியப் பாடசாலையில் உயர்தரம் வரை கல்வி கற்றேன். நான் 1989ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டேன். திருமணத்தின் பின்னர் எமக்கென்று ஒரு வீடு இருக்கவில்லை. நானும் எனது கணவரும் எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் வீட்டில் ஒரு வருடம் வரை மாறி மாறி தங்கியிருந்து வாழ்க்கையை போக்கிக் கொண்டிருந்தோம். எனது கணவர் சாரதியாக தொழில் புரிந்தார். கணவரின் அம்மாவினால் அவருக்கென்று ஒரு துண்டு காணி வழங்கப்பட்டது. அதில் சிறிய வீடொன்றை நிர்மாணித்துக் கொள்ளும் நோக்கில் அங்கு சென்றோம். அவ்வாறே, ஒரு சிறிய அறையை மாத்திரம் நிர்மாணித்துக் கொண்டோம். காலம் இவ்வாறு கழிந்துக் கொண்டிருந்த போது எமது வாழ்க்கையில் எதிர்பாரத மாற்றமொன்று இடம்பெற்றது.



எனது கணவரின் நண்பர் ஒருவரின் கொங்கிரீட் அச்சு ஒன்று எம்மிடம் இருந்தது. எனது கணவரும் அந்த அச்சினை வீட்டின் ஓரத்தில் வைத்திருந்தார். ஒரு நாள் எனது கணவர் அந்த அச்சினை எடுத்து சீமேந்து தூண்கள் இருபது வரை தயாரித்தார். அவ்வாறு செய்த தூண்களை வீட்டின் முன் வைத்தார். பின்னர் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அந்த தூண்களை 60ரூபா கொடுத்து விலைக்கு வாங்கிச் சென்றார்கள். இது 1990ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதனை ஒரு தொழிலாக செய்ய வேண்டுமென்ற எண்ணம் அதன் பின்னரே எமக்கு தோன்றியது. அதன் பின்னர் நாம் பூச்சாடி அச்சுகளையும் விலைக்கு வாங்கி சீமேந்து பூச்சாடிகளையும், கொங்கிரீட் தூண்களையும் உற்பத்தி செய்தோம். எனது கணவர் முச்சக்கரவண்டி சாரதியாக இருந்தமையால் ஆரம்பத்தில் நான் தான் இதனை செய்து வந்தேன். முச்சக்கர வண்டி ஓடி வீட்டுக்கு வந்த பின்னர் கணவர் பூச்சாடியும், கொங்கிரீட் தூண்களையும் இரவில் கண்விழித்து செய்வார். அவற்றை எமது வீட்டின் முன்னால் வைத்து விற்பனை செய்து வந்தோம். சிறிது சிறிதாக எமது வியாபாரத்தை நாம் விருத்தி செய்தோம். அதன் இரண்டொருவரை நாம் தொழிலுக்கு அமர்த்தினோம். அதன் பின்னர் மேலும் பல கொங்கிரீட் தூண்களை செய்ய முடிந்தது. கொங்கிரீட் தூண், அழகு தூண்கள், கிறில் டிசைன், பூங்கா நாட்காலிகள் போன்ற கொங்கிரீட் வேலைகள் பலவற்றை நாம் உற்பத்தி செய்தோம். எம்மால் நிர்மாணிக்கப்பட்டவற்றை கல்நேவ, ராஜாங்கணை போன்ற பிரதேசங்களுக்கு கொண்டு சென்று விநியோகித்தோம். நாம் ELF லொறியொன்றை வாங்கி எமது உற்பத்திகளை சந்தைப்படுத்த உறுதுணையாக இருந்தது.

இவ்விதம் எமது வியாபாரத்தை நடத்திச் கொண்டிருந்த போது தொலைக்காட்சியில் கிராமின் நிறுவனம் தொடர்பான விளம்பரமொன்று ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதில் தம்புத்தேகம பிரதேசத்தில் கிராமின் கிளை ஆரம்பிப்பது தொடர்பான தகவல் குறிப்பிடப்பட்டது. எமது பிரதேசத்திலும் கிராமின் கிளையொன்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென நான் கருதினேன். அதன் பின்னர் நான் கிராமின் தலைமைக் காரியாலயத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கல்கமுவ பிரதேசத்தில் கிராமின் கிளை ஆரம்பிக்கப்படுமா என்று வினவினேன். அவர்கள் கல்கமுவ பிரதேசத்தில் வெகுவிரைவில் கிளை ஆரம்பிக்கப்படும் என்ற செய்தி எனக்கு கிடைத்தது. 2007ஆம் கல்கமுவ கிளை மாகலாவில் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் முதலாவது அங்கத்தவர் நான்தான். எனது வியாபாரத்துக்காக நான் 10,000 ரூபாவை கடனாகப் பெற்றேன். அதன் பின்னர் 15,000, 25,000ரூபா வரை கடன் பெற்றுக் கொண்டு எனது வியபாரத்தை சிறப்பாக நடத்திச் சென்றேன்.

இன்று சகல இடங்களிலும் கொங்கிரீட் உற்பத்திகள் காணப்படுவதால் முன்பு போன்று இலகுவாக சந்தைப்படுத்துவது சாதாரண விடயமல்ல. எனினும் புதிய, புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்துவதால் அந்த போட்டிக்கு முகம் கொடுக்க முயற்சி செய்ய வேண்டியுள்ளது. நாம் புதிதாக தயாரித்த வோல்டைல் உற்பத்தி அதற்கு சிறந்த முன்னுதாரணமாகும். இன்று நாம் பல தொழிலாளர்களை ஈடுபடுத்தி இந்தளவு முன்னேற்றம் அடைவதற்கும் எமது பிள்ளைகள் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்பதற்கும் முடியுமாக இருப்பதற்கு இந்த உற்பத்திகளே காரணமாகும். அந்தளவு நாம் எமது வியபாரத்தை கட்டியெழுப்பியுள்ளோம். எமது வியாபாரத்தை சிறப்பாக முன்னெடுக்க எச்.என்.பி. கிராமின் நிறுவனம் கல்கமுவ கிளை முகாமையாளர் மற்றும் எமது மத்திய நிலைய உத்தியோகத்தர்களின் பங்களிப்பு, ஆலோசனைகள் பாராட்டுக்குரியன. அவ்வாறே கிராமின் நிறுவனத்தின் தலைவர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் நான் நன்றியுடையவர்களாக இருப்பதுடன் எம் போன்ற பொருளாதார பின்னடைவில் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிதி உதவி செய்யும் நிதி நிறுவனத்துக்கும் தலைவருக்கும் தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டு அவர்களின் வாழ்வில் சமாதானமும் சௌபாக்கியமும் நிகழ பிரார்த்தனை செய்கிறேன்.



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க

# உங்களுக்கு தெரியாத நான்



**முழுப் பெயர் :** சிதம்பரபிள்ளை ரொஷான்

**பிறந்த திகதி :** 1981.03.26

**உங்களுக்கு பிடித்த பாடசாலை:** நான் இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றேன். வவுனியா இரம்பைக்குளம் பெண்கள் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். இதில் ஆண்களும் தரம் 5 வரை கற்கலாம். இதனால், 6ஆம் ஆண்டில் இருந்து வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். உயர்தரம் வரை அந்தப் பாடசாலையிலேயே கல்வி கற்றேன். எனக்கு வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் மிகவும் பிடித்த பாடசாலையாகும். அந்தப் பாடசாலையில் கிரிக்கட், கால்பந்து மற்றும் பல விளையாட்டுக்களில் நான் கலந்து கொண்டேன். பல்வேறு இலக்கிய சங்கங்களிலும் அங்கத்தவராக இருந்துள்ளேன். எங்கள் வீட்டின் பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் நான் உயர்தரம் கற்றேன். இதனால், எனக்கு உயர்தரப் பரீட்சை மிகவும் கடினமாக இருந்தது. ஓரிரு புள்ளிகள் வித்தியாசத்தில் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்ததுடன் அந்த விரக்தியில் இரண்டாம் தடவை பரீட்சையில் தோற்றுவதற்கு நான் முயற்சிக்கவில்லை.

**பாடம்:** கணிதம். சிறு வயது முதல் கணித பாடத்தை விரும்பி கற்றேன்.

**விளையாட்டு. கிரிக்கட்.** விளையாட்டு கழகமொன்றில் இணைந்து கிரிக்கட் விளையாடினேன்.

**பாடசாலைக்காலத்தில் எதிர்கால இலட்சியமாக இருந்தது:** பொலிஸில் இணைந்து கொள்ள இருந்தேன். எனது தந்தை பொலிஸில் கடமையாற்றினார். இதனால் என்னவே எனக்கும் பொலிஸாராக வரவேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அவ்வாறே எனது மச்சான், சகோதரி இன்னுமொரு மாமா ஆகியோர் பொலிஸ் துறையில் கடமையாற்றுகின்றனர். குறிப்பாக எமது குடும்பம் ஒரு பொலிஸ் துறையைப் போன்றது. நான் SI இன்டர்விவ் சென்றேன். அதன் போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எமது நியமனம் காலதாமதமானது. இவ்விதம் இருக்கும் போது எனது காதலி நான் பொலிஸ் துறைக்கு செல்வதை விரும்பவில்லை. இறுதியில் அவளது விருப்பத்தின் படி நான் வேறொரு தொழிலை தெரிவு செய்ய வேண்டியேற்பட்டது.

**முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் எதிர்கொண்ட சிரமம்:** நான் தொழிலைப் பெறுவதற்கு அந்தளவு சிரமப்படவில்லை. 2000ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபை பரீட்சைக்கு தோன்றி அதில் சித்தியடைந்து RDAவில் உதவி கணக்காளராக செயற்பட்ட சந்தர்ப்பம் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது. இவ்விதம் தொழில் புரிந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் சனிக்கிழமை நாட்களில் நான் வவுனியா கிராமின் கிளையில் தொழில் புரிந்த எனது நண்பர் லிங்கேஸை பார்வையிட செல்வேன். அவருக்கு நான் கிளை கணக்குகளை செய்வதற்கு உதவியுள்ளேன். ஒரு நாள் ஹெட் ஒபிஸில் இருந்து கிளைக்கு வந்திருந்திருந்தார்கள். நான் யார் என்று லிங்கேஸிடம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு லிங்கேஸ் என்னை அறிமுகம் செய்து வைத்தார். எனது தகவல்களைப் பெற்றுக் கொண்டு கிராமின் கிளையில் இணைந்து கொள்ள விருப்பமா என்று கேட்டார்கள். நானும் விரும்பினேன். நான் இவ்விதமே கிராமினில் இணைந்து கொண்டேன்.

**கிராமின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** எனது தந்தை பொலிஸில் கடமையாற்றியதால் எமது குடும்பம் அவ்வாறான சூழலில் வாழ்ந்த குடும்பமாகும். அனைத்தும் வரையறைக்கு அமையவே இடம்பெற்றது. ஒரு நாள் எனது காலில் சிறு காயம் ஏற்பட்டதால் சப்பாத்து அணிய முடியாத நிலை ஏற்பட்டது. நான் செருப்பொன்றை அணிந்து கொண்டு காரியாலயத் துக்கு செல்ல முற்பட்ட போது எனது தந்தை அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். செருப்பு அணிந்து ஆபிஸ் செல்வதில்லை என்று கூறினார். இறுதியில் பொலிஸாரைப் போன்றே நான் காரியாலயம் சென்றேன். காயம் இருந்த காலுக்கு செருப்பையும் மற்ற காலுக்கு சப்பாத்தையும் அணிந்து கொண்டே சென்றேன். அது மாத்திரமின்றி டை ஒன்றையும் அணிந்து கொண்டு ஆபிஸ் சென்றதால் ஏதோ ஒரு புதிய மிருகம் ஆபிஸ் வருவதைப் போன்று எல்லோரும் புதுமையாக அவதானித்தார்கள். ஏதோ ஜோக்கரைப் போன்று.



சிதம்பரபிள்ளை ரொஷான்
பிரதேச கணக்காளர்




## பொலிஸாரைப் போன்று செருப்பும், சப்பாத்தும் அணிந்து கொண்டு காரியாலயம் சென்ற நாட்கள். . .

**வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாளும், துன்பமான நாட்களும்:** நாம் திருமணம் முடித்து இரண்டு ஆண்டுகளின் பின்னரே எமக்கு குழந்தை கிடைத்தது. 2011 செப்டம் 14ஆம் திகதி எனது வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான நாளாகும். அன்று காலை எனது மனைவி மிகவும் கஷ்டப்பட்டார். உடனடியாக அவரை வைத்தியசாலையில் அனுமதித்தோம். எனது மனைவிக்கு பிரசர் கூடியுள்ளது என்பதை அதன் போது உணர்ந்து கொள்ள முடிந்தது. பிள்ளையின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று வைத்தியர்கள் கூறினார்கள். இதனை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. எனது சகல கனவும் தகர்ந்து விட்டதாகவே கருதினேன். எனினும் கடவுளின் புண்ணியத்தால் சிசேரியன் முறையில் அம்மாவையும் மகனையும் வைத்தியர்கள் காப்பாற்றினார்கள்.

**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தால் வாழ்க்கையில் தேர்ந்தெடுக்கும் சிறந்த காலமும் அதற்கான காரணமும்:** மற்றவர்களைப் போன்று எனது பாடசாலை

தொடர்ச்சி 09

08ஆம் பக்க தொடர்ச்சி

வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாக இருக்கவில்லை. பாடசாலை செல்லவும், வீட்டுக்கு வந்து பாடங்களை கற்கவும, மேலதிக வகுப்புகளுக்கு செல்லவும், மாலை ஆறு மணிக்கு முன்னர் வீட்டுக்கு வருதல் போன்ற ஒரு வட்டத்திற்குள் எனது வாழ்க்கை வறையறுக்கப்பட்டிருந்தது. நான் 2001-2009ஆண்டு காலத்தை மிகவும் விருப்பமான காலமாக கருதுகிறேன். அக்காலப்பகுதியில் சுதந்திரமாக தீர்மானமெடுத்து செயற்பட்ட காலமாகும்.

வாழ்க்கையில் இழந்த பெறுமதிமிக்க நபர் அல்லது சொத்து: எனது தந்தை. அவர் எங்களை மிகவும் கட்டுப்பாட்டுடன் வளர்த்து வந்தார். கடமையை அந்தந்த நேரத்தில் செய்ய வேண்டும். நான் ஒழுக்கமாக வாழ வேண்டுமென்பதை எனது தந்தையிடம் கற்றுக் கொண்டேன். 2010ஆம் ஆண்டு எனது தந்தை மரணித்த பின்னர் நான் எவ்வாறு வாழ்வேன் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது . . . இன்று எனது தந்தை இருந்திருந்தால் எனக்கு பாரிய சக்தியாக இருந்திருக்கும்.

மாற்றிக் கொள்ள வேண்டு

எனது முன்கோபம். சற்று அதிகமாக கோபம் வந்தால் அதனைப் போலவே அனைத்தும் இருக்கும். சில வேளை நான் பொலிஸாராக கடமையாற்றியிருந்தால் என்னவாகியிருக்குமோ என்று எனக்கு தெரியாது. எனக்கு முன்கோபத்தை கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் எனது டைக்கு மரியாதை செலுத்த வேண்டுமல்லவா.

உங்கள் வாழ்க்கையில் முன்னோடியாக கருதும் நபராக இருப்பவர்: எனது மனைவி. நான் அவ்வாறு சொல்வதற்கு காரணம் எனது வாழ்க்கையின் விருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கியவர் அவராகும். நான் உயர்தரம் கற்று பட்டப்படிப்பொன்றை மேற்கொள்வதற்கு காரணமாக இருந்தவர் அவராகும். அவள் நிச்சயமாக துணிச்சலான பெண்ணாகும்.

உங்கள் முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்: உயர்தரம் கற்ற பின்னர் 2001ஆம் ஆண்டு நான் கம்பியூட்டர் நிலையம் ஒன்றில் பயிற்றுநராக செயற்பட்டேன். அந்தக் காலத்தில் என்னை விரும்பும் பெண்ணொருவர் எனக்கு இருந்தார். அவர்தான் ஜனனி. அவள் தான் எனது மனைவி.

அவரிடம் காணப்படும் விசேட குணாம்சங்கள்: நான் வேலைப்பளு மிகுந்த மனிதராகும். பிரதேசத்துக்கு பொறுப்பான கணக்காளராக நான் கடமையாற்றுவதால் பல கிளைகளின் கணக்குகளை பார்வையிட வேண்டியுள்ளது. எனது மனைவி வங்கியில் கடமையாற்றுவதால் எனது பொறுப்பினை நன்கு உணர்ந்து எனது தேவைக்கு ஏற்ப அவர் செயற்பட்டு வருகிறார். அவ்வாறே வாழ்க்கையின் சகல சந்தர்ப்பத்திலும் நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்கும் பெண்ணாகவும் அவள் திகழ்கிறாள்.

உங்கள் வாழ்க்கை தொடர்பில் திருப்தியடைகிறீர்களா? நான் சகல சந்தர்ப்பத்திலும் ஒரு விடயத்தை சரியாக செய்வதற்கு முயற்சி செய்கிறேன். தெரியாது என்ற வார்த்தை எனக்கு பிடிக்காது. நான் வாழ்க்கையில் முழுமையாக திருப்தியடைந்துவிட்டதாக கருதவில்லை. அதற்கு இடையில் இருக்கிறேன் என்பதே சரியாகும்.

உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற திருப்பு முனை (Turning point): நானும் எனது மனைவியும் ஒரு துறையில் கடமையாற்றுகின்றோம். அவள் செலான் வங்கியில் நான் கிராமினில். 2009ஆம் ஆண்டு நான் பிரச்சினைகளுக்கு மத்தியில் திருமணம் முடித்தேன். எனது சம்பளம் வெட்டப்பட்டது. எமது நிறுவனம் நட்டத்தில் இயங்கியமையால் எமக்கு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டது. அவ்விதம் இருக்கும் போது செலான் வங்கியின் முல்லைத்தீவு கிளையில் உதவி முகாமையாளராக செல்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. எனினும் நான் கிராமின் நிறுவனத்தை விட்டு விட்டு செல்லவில்லை. அன்று நான் எடுத்த முடிவினால் இன்று எச்.என்.பி.கிராமின் போன்ற வலுவான நிதி நிறுவனத்தில் இவ்வாறான பதவியொன்றை பெறக்கூடியதாக அமைந்தது எனலாம்.

பிடித்த பாடகர்: ஏ.ஆர். ரகுமான்

பாடல்: ஒரு பாடல் என்று கூற முடியாது. மெல்லிசைப் பாடல்களுடன் அர்த்தமுல்ல பாடல்கள் மிகவும் பிடிக்கும்.

திரைப்படம்: Expandable 2 திரைப்படம்

நாவல்: கைத்தொழிலுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளுடன் தொடர்புபட்ட நாவல்களை விரும்பி வாசிப்பேன்.

எதிர்கால இலக்கு: நான் இன்றும் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமான வீடொன்றை நிர்மாணித்து எனது பிள்ளைகளுக்கு நல்ல வாழ்க்கையைப் அமைத்துக் கொடுப்பதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதே



ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

## HNB கிராமின் சுவசக்தி


## "கடனை மீண்டும் செலுத்துவதற்கு கஷ்டப்படத் தேவையில்லை"



கல்கமுவ அரசங்வெவயைத் தாண்டிச் செல்லும் போது சுஜித்தின் மரக்கறி கடையும், மீன் விற்பனை நிலையமும் அங்குள்ளவர்களின் நன்மதிப்பைப் பெற்ற கடைகளாகும். பல வருடங்களாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு வரும் அவர் நிதிப் பிரச்சினை ஏற்பட்ட போது சுஜித் விரைவாக கடனைப் பெற்றுக் கொண்டது எச்.என்.பி. கிராமின் நிறுவனத்தினாலாகும். வியாபாரிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட சுவசக்தி கடன் திட்டத்தின் மூலமே அவர் கடனைப் பெற்றுக் கொண்டார்.

சிறு முயற்சியாளர்களான எமக்கு காலம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சில மணி நேரங்களாவது மிகவும் முக்கியமான விடயமொன்றுக்காக காலத்தை விரயம் செய்வது எமது வியாபார முயற்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வியாபாரத்துக்கு நிதித் தேவை ஏற்படுவது எதிர்பாராத சந்தர்ப்பத்திலாகும். அந்த சந்தர்ப்பத்தில் வங்கியில் கடன் பெற முற்படும் போது சொத்து விபரங்களை சமர்ப்பித்து பல்வேறு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து பல வாரங்கள் காத்திருக்க வேண்டியதுடன் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் நான் எச்.என்.பி. கிராமின் சுவசக்தி கடன் திட்டத்தின் ஊடாக இலகுவாக கடனைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதால் இணைந்து கொண்டேன். இந்தத் திட்டத்தில் எமக்கு தெரியாமலேயே பணம் சேமிப்பு கணக்கில் வைப்பிடப்படுகிறது. அதுவும் எமக்கு நன்மையாகும். கடன் தவணைப் பணத்தை அறவிட நிறுவன ஊழியர்கள் எம்மிடம் நேரடியாக வருகை தருவதால் கஷ்டமின்றி தவணைப்பணத்தை செலுத்த முடிவதுடன் கால விரயம் தவிர்க்கப்படுகிறது.

ஏ. சுஜித் பிரசாந்த
இகல அரசங்வெவ, கல்கமுவ




தனக்கென்று இலக்கினை தீர்மானித்து அதனை அடைவதற்கு திட்டமிடலை செய்வது அவசியம்



நிகழ்வின் ஆரம்பமாக



# எச்.என்.பி.கிராமின் சவால் கிண்ணம் இம்முறையும் புத்தளம் கிளைக்கு

எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் நடத்தும் எச்.என்.பி.கிராமின் சவால் கிண்ண மாபெரும் கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டி செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி கொழும்பு 07, புளும்பீல்ட் விளையாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. பிரதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்டு வெற்றியீட்டிய 16 கிரிக்கட் அணிகள் மற்றும் தலைமைக் காரியாலயத்தின் நான்கு அணிகள் உட்பட மொத்தமாக இருபது அணிகள் பங்குபற்றிய இப் போட்டியில் எச்.என்.பி. கிராமின் சவால் கிண்ணத்தை எச்.என்.பி.கிராமின் புத்தளம் கிளை சுவீகரித்துக் கொண்டது. இரண்டாவது தடவையாகவும் சவால் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்ட புத்தளம் கிளை இம்முறை இரண்டாமிடத்தை மட்டக்களப்பு அணி பெற்றுக் கொண்டமை விசேட அம்சமாகும். சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதினை புத்தளம் அணியின் சுஜித் சஞ்சீவ பிரியதர்ஷன பெற்றுக் கொண்டதுடன் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதினை மட்டக்களப்பு கிளையின் ஈஸ்வரன் மீனவதாஸ் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதினை மட்டக்களப்பு கிளையின் வீ.சுகிந்தரன் பெற்றுக் கொண்டார். கிரிக்கட் போட்டிகளுக்கு அப்பால் நூறு மீற்றர் ஓட்டப் போட்டி, பந்துகளுக்கு நீர் ஊற்றி வீசும் போட்டி மற்றும் பெலூன் உடைத்தல் போட்டி, நகைச்சுவையாளர் போன்ற வினோதப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை அன்றைய முழு நாளையும் விறுவிறுப்பாக்கும் வகையில் அமைந்திருந்தது.

கடந்த வருடங்களில் இடம்பெறாத விசேட போட்டியாக இம்முறை எச்.என்.பி.கிராமின் சவால் கிண்ண மாபெரும் கிரிக்கட் போட்டியிக்கு மேலதிகமாக எச்.என்.பி.கிராமின் அழகு ராணி மற்றும் அழகு ராஜா தெரிவு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

எச்.என்.பி.கிராமின் நிறுவனம் நட்புறவுடன் சகலரும் இணைந்து ஒற்றுமையாக ஏற்பாடு செய்த இந்த போட்டியானது விசேடமானது என்பதுடன் வருடா வருடம் மிகவும் சிறப்பாக நடைபெறுவது எச்.என்.பி. கிராமின் அணிகளின் கூட்டுப் பலம் பாரிய சக்தியாக இருப்பதாக இறுதிப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட எச்.என்.பி.கிராமின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் தெரிவித்தார். போட்டியின் பரிசளிப்பு விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் எச்.என்.பி.கிராமின் நிறுவனத் தலைவர் ஜொனதன் அலஸ் அவர்கள், உப தலைவர் பி.பிரேமலால் அவர்கள், பணிப்பாளர் திருமதி சந்தமினி பெரேரா மற்றும் பணிப்பாளர் திருமதி கிறிசாந்தி தம்பையா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.





அணி வீரர்களை அறிமுகப்படுத்தல்



போட்டியின் இடையில்



கிராமின் அதிவேக வீரர்

கிராமின் அதிவேக வீராங்கனை



தீர்ப்புக்காக காத்திருக்கும்



கிராமின் அழகுராஜா யார்?

உண்மையான அதிர்ஷ்டம் தனது சுய முயற்சியினால் பெற்றுக் கொண்ட வளமாகும்



இறுதிப் போட்டிக்கு தெரிவான அணிகள் . . .

வெற்றிக் களிப்பில் கிண்ணத்துடன்



இரண்டாமிடம் மட்டக்களப்புக்கு

வெற்றிக் கிண்ணத்துடன் புத்தளம் அணியினர்

எம்மை விமர்சனம் செய்வோர் எமக்கு வலுவையும், ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றனர்

# மன்னார் கிளை புதிய கட்டிடத்தில்

எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் நிறுவன கிளை வலையமைப்பின் 47ஆவது கிளையான மன்னார் கிளை புதிய கட்டிடத்தில் ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.50 சுபநேரத்தில் இருந்து செயற்பட ஆரம்பித்தது.

இவ்வளவு காலமும் இல. 28, சென்ட் சேர்வியர் மகளிர் கல்லூரி மாவத்தை, சின்னக்கடை, மன்னார் முகவரியில் செயற்பட்டு வந்த மன்னார் கிளையானது இன்று முதல் எவர்லேட் ஒப் விக்டரி கட்டிடம், முதலாம் மாடி, பிரதான வீதி, மன்னார் என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய கட்டிட திறப்பு விழாவில் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் விசேட அதிதியாகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் பொது முகாமையாளர் (நிதி) பிரியலால் அரங்கல, பிரதி பொதுமுகாமையாளரான அனெஸ்லி பெர்ணாந்து, ருவன் பெர்ணாந்து ஆகியோரும் உதவி பொதுமுகாமையாளர் மஹிந்த ரத்னாயக்க உட்பட எச்.என்.பி. கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் உத்தியோகத்தர்கள் மற்றும் பெருந்திரளான வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டனர்.

எச்.என்.பி. கிராமின் நிலையான வைப்பு, யாலு, எச்.என்.பி.கிராமின் வைப்பு, மியுலெஸி சத்கார போன்ற வைப்புகள் அன்றைய தினம் பெருமளவான வாடிக்கையாளர்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறே அபிலாஷ, சுவசக்தி, ஈஸி லோன் ஆகிய நிதிச் சேவைகளை கிளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதே தமது நோக்கம் என இங்கு கருத்து தெரிவித்த மன்னார் கிளை முகாமையாளர் பிலிப் ஹோமர் அவர்கள் மெஹவரவுக்கு தெரிவித்தார்.






எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் லிமிட்டெட் கம்பஹா கிளையில் சேவையாற்றி வரும் உதவி முகாமையாளர் கயான் சம்பத் அவர்கள் திருமதி என்.துஷாரியை கடந்த ஆகஸ்ட் மாதம் 19ஆம் திகதி சுப நேரத்தில் மணம் முடித்துக் கொண்டார்.

மணவாழ்க்கையில் இணைந்து கொண்ட தம்பதிகளுக்கு எச்.என்.பி.கிராமின் பினான்ஸ் லிமிட்டெட்டின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை மற்றும் சகோதர காரியாலய உத்தி யோகத்தர்கள் அவருக்கு இதயம் கனிந்த வாழ்த் துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.





## Happy Birthday

செப்டெம்பர், அக்டோபர் மாத பிறந்த நாளைக் கொண்டாடும் பிரைம் கிராமின் நிறுவன ஊழியர்களுக்கு எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்...!

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. திலங்க பத்மசிறி | செப்டெம்பர் 16 | அவிசாவளை |
| திரு. ரொஹான் உதயங்க | செப்டெம்பர் 16 | வத்தளை |
| திரு. தினூஷ உதயகுமார | செப்டெம்பர் 16 | பதுளை |
| திரு. எச்.எம்.டிபி. சஞ்சய | செப்டெம்பர் 16 | ஜாஎல |
| திரு. அமீத உதயங்க | செப்டெம்பர் 16 | மாத்தளை |
| திருமதி. ஷெ. ஏ அல்மேதா | செப்டெம்பர் 16 | மத்துகம |
| திருமதி இ நதீஷானி | செப்டெம்பர் 16 | ஹம்பாந்தோட்டை |
| திரு. துலாப் மதுசங்க | செப்டெம்பர் 16 | வென்னப்புவ |
| திரு. லக்பிரிய ருக்சாந்த | செப்டெம்பர் 16 | களுத்துறை |
| திரு. சுதேஷ் சத்துரங்க | செப்டெம்பர் 17 | தலைமையகம் |
| திரு. புத்திக பிரசாத் | செப்டெம்பர் 17 | தம்புள்ளை |
| திரு. ஹரிந்து லசந்த | செப்டெம்பர் 17 | களுத்துறை |
| திரு. சுரேஷ் சாமர | செப்டெம்பர் 17 | கந்தளாய் |
| திரு. ரொஷான் தாரக | செப்டெம்பர் 18 | ஹொரனை |
| திரு. த.கொதலாவல | செப்டெம்பர் 19 | மத்துகம |
| திரு. ஜனக பிரபாத் | செப்டெம்பர் 20 | வெலிமடை |
| திரு. சந்தன குமார | செப்டெம்பர் 20 | நீர்கொழும்பு |
| திரு. கே. கருணாகரன் | செப்டெம்பர் 20 | வவுனியா |
| திரு. தரிந்து நுவன் | செப்டெம்பர் 21 | வத்தளை |
| திரு. பீ. சதுசன் | செப்டெம்பர் 21 | முல்லைத்தீவு |
| திரு. ரொ. சந்தருவன் | செப்டெம்பர் 21 | பலாங்கொடை |
| திரு. துஷான் ஜயதிலக | செப்டெம்பர் 21 | வத்தளை |
| திரு. தயாபிரிய சில்வா | செப்டெம்பர் 22 | அம்பலாங்கொடை |
| திரு. நுவன் ஜயசங்க | செப்டெம்பர் 22 | அம்பலாங்கொடை |
| திரு. சிவந்த ராஜபக்ஷ | செப்டெம்பர் 22 | தலைமையகம் |
| திருமதி. சி தஸநாயக்க | செப்டெம்பர் 22 | கலென்பிந்துனுவெவ |
| திரு. சொ. விக்ரமசிங்க | செப்டெம்பர் 23 | கண்டி |
| திரு. தினூஷ கேஷானி | செப்டெம்பர் 23 | அம்பாறை |
| திரு. சரித புத்திக | செப்டெம்பர் 23 | மாத்தளை |
| திரு. ல. திஸாநாயக்க | செப்டெம்பர் 23 | மஹியங்கனை |
| திரு. ஷானுக பிரதீப்குமார | செப்டெம்பர் 25 | ஜாஎல |
| திரு. சாமர பிரசாத் | செப்டெம்பர் 25 | நாவலப்பிட்டி |
| திரு. லக்சித த சில்வா | செப்டெம்பர் 25 | கம்பஹா |
| திரு. கபில எரபந்துபிட்டிய | செப்டெம்பர் 26 | தலைமையகம் |
| திரு. லசந்த சஞ்சீவ | செப்டெம்பர் 27 | தலைமையகம் |
| திரு. ஜபீர் சுமன் | செப்டெம்பர் 27 | திருகோணமலை |
| திரு. சன்ன குமார | செப்டெம்பர் 28 | நிட்டம்புவ |
| திருமதி சியாமலி தில்ருக்ஷி | செப்டெம்பர் 28 | சிலாபம் |
| திரு. பிரியந்த சில்வா | செப்டெம்பர் 28 | ஜாஎல |
| திரு. நிசாந்தன் குரூஸ் | செப்டெம்பர் 28 | மன்னார் |
| திரு. செல்வராஜா நிமலராஜ் | செப்டெம்பர் 28 | மன்னார் |
| திரு. எம். விக்னேஸ்வரராஜா | செப்டெம்பர் 28 | மல்லாவி |
| திரு. சத்துரங்க முனசிங்க | செப்டெம்பர் 29 | மாத்தறை |
| திரு. ஒஸான் பெரேரா | செப்டெம்பர் 29 | தலைமையகம் |
| திரு. காமினி பிரசன்ன | செப்டெம்பர் 29 | வெலிமடை |
| திரு. கயான் சம்பத் | செப்டெம்பர் 30 | கம்பஹா |
| திரு. துவான் டில்சான் | செப்டெம்பர் 30 | தம்புள்ளை |
| திரு. எஸ். பாக்கியநாதன் | செப்டெம்பர் 30 | மட்டக்களப்பு |
| திரு. நுவன் தமித் | அக்டோபர் 01 | அம்பாறை |
| திரு. செனத் கவிந்த | அக்டோபர் 01 | வென்னப்புவ |
| திரு. அமித் கேமச்சந்திர | அக்டோபர் 02 | புத்தளம் |
| திரு. நிர்மாண குணசேகர | அக்டோபர் 02 | தலைமையகம் |
| திரு. தில்ஷான் பொன்சேகாஅ | அக்டோபர் 02 | வத்தளை |
| திருமதி. ஜீவனி ஹங்சிகா | அக்டோபர் 02 | மதவாச்சி |
| திரு. இந்துனில் சம்பத் | அக்டோபர் 03 | கேகாலை |
| திரு. சமந்த சந்தன | அக்டோபர் 04 | மதவாச்சி |
| திரு. ரோஹன அபேசேகர | அக்டோபர் 05 | வெலிமடை |
| திரு. டில்சான் பெர்ணாந்து | அக்டோபர் 05 | நீர்கொழும்பு |
| திரு. சந்தருவன் விஜேரத்ன | அக்டோபர் 05 | அவிசாவளை |
| திரு. ராமதாஸ் அரவிந்தன் | அக்டோபர் 05 | வவுனியா |
| திரு. சமீரமதுசங்க | அக்டோபர் 05 | தெஹியத்தகண்டி |
| திரு. கயான் எதிரிவிக்ரம | அக்டோபர் 06 | பெலியத்தை |
| திரு. உபாலி ஜயவர்தன | அக்டோபர் 06 | வெலிமடை |
| திரு. தவல அசங்க | அக்டோபர் 06 | காலி |
| திரு. மாதவ சத்யஜித் | அக்டோபர் 06 | கெக்கிராவ |
| திரு. சானக மதுசங்க | அக்டோபர் 06 | நிக்கவரெட்டி |
| திரு. ஏ. ரதீஸ் | அக்டோபர் 07 | மட்டக்களப்பு |
| திரு. ரசிக தேசபிரிய | அக்டோபர் 07 | அம்பலாங்கொடை |
| திரு. ஒகந்த ஜயசிங்க | அக்டோபர் 07 | தலைமையகம் |
| திருமதி. அனுராத சமரக்கோன் | அக்டோபர் 07 | கல்கமுவ |
| திரு. ரமேஸ் ஜயசுந்தர | அக்டோபர் 07 | கம்பஹா |
| திரு. எஸ். பிரதீபன் | அக்டோபர் 07 | யாழ்ப்பாணம் |
| திரு. ஜெப்ரி பர்தோலமியுஸ் | அக்டோபர் 07 | வத்தளை |
| திரு. கயந்த பொன்சேகா | அக்டோபர் 07 | மொரட்டுவ |
| திரு. துவான் டில்சாட் | அக்டோபர் 08 | ஹம்பாந்தோட்டை |
| திரு. டபிள்யு.சஞ்சீவ | அக்டோபர் 08 | மதவாச்சி |
| திரு. வருன பிரசாத் | அக்டோபர் 08 | அவிசாவளை |
| திரு. சந்துன் ராஜபக்ஷ | அக்டோபர் 09 | கல்கமுவ |
| திரு. ருவன் அச்சலங்க | அக்டோபர் 09 | கண்டி |
| திரு. ஆர். சத்யராஜா | அக்டோபர் 09 | மட்டக்களப்பு |
| திருமதி பிரபாபினி | அக்டோபர் 09 | கல்முனை |
| திரு. அமில சாலிந்த | அக்டோபர் 10 | பொலன்னறுவை |
| திரு. என். சிவரூபன் | அக்டோபர் 10 | கல்முனை |
| திரு. துசான் உதார | அக்டோபர் 10 | இரத்தினபுரி |
| திரு. எஸ். கஜன் | அக்டோபர் 10 | நெல்லியடி |
| திரு. தினேஸ் மதுசங்க | அக்டோபர் 10 | காலி |
| திரு. குமார் பிரதீப் | அக்டோபர் 10 | மன்னார் |
| திரு. சக்தி பெர்ணாந்து | அக்டோபர் 10 | நகரக்கிளை |
| திரு. சுரங்க பத்திரன | அக்டோபர் 10 | கேகாலை |
| திரு.கே.டி. சம்பத் | அக்டோபர் 11 | கல்கமுவ |
| திரு. பீ. சுதர்சன் | அக்டோபர் 11 | மட்டக்களப்பு |
| திரு. அமில துஷார | அக்டோபர் 11 | மொரவக |
| திரு. சரித் சுரங்க | அக்டோபர் 12 | கந்தளாய் |
| திரு. லலித் ரொஹான் | அக்டோபர் 12 | குருநாகலை |
| திரு. ஆர்.சுதர்சன் | அக்டோபர் 12 | நெடுங்கேணி |
| திரு. என்.மகேந்திர ரகு | அக்டோபர் 13 | திருகோணமலை |
| திரு. ஜே.குமார குணதாஸ | அக்டோபர் 13 | மதவாச்சி |
| திரு. அமில சஞ்சீவ | அக்டோபர் 13 | தலைமையகம் |
| திரு. கெவிந்து மலித் | அக்டோபர் 13 | ஜாஎல |
| திரு. வீ. வினோஜன் | அக்டோபர் 13 | புத்தளம் |
| திரு. அருண சிவந்த | அக்டோபர் 14 | நிட்டம்புவ |
| திரு. சுஜித் பிரியங்கர | அக்டோபர் 14 | மொரவக்க |
| திரு. அனுஷ்க கயான் | அக்டோபர் 14 | பெலியத்தை |
| திரு. சமீர நிரோஷன | அக்டோபர் 14 | மாத்தளை |
| திரு. சரத் குமார் | அக்டோபர் 14 | மொனராகலை |
| திரு. சத்துரங்க விக்ரமசிங்க | அக்டோபர் 14 | வத்தளை |
| திரு. நந்தன புஸ்பகுமார | அக்டோபர் 14 | மொரவக்க |
| திரு. தனுஷ்க நலின் | அக்டோபர் 14 | தம்புள்ளை |
| திரு. பீ. மதுஸ்க | அக்டோபர் 14 | நுவரெலிய |
| திரு. தனஞ்சய நாமல் | அக்டோபர் 15 | பாலன்னறுவை |
| திரு. யோகநாதன் கிருபா | அக்டோபர் 15 | நெடுங்கேணி |

மெஹெவர

பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்
இல. : 168, நாவல வீதி, நுகேகொடை
தொலைபேசி: 0112176262 பெக்ஸ் : 0112825843
மின்னஞ்சல்: manjula.p@primegrameen.lk
இணையம்: www.primegrameen.com

பணிப்பாளர்: சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்றுப் உத்தியோகத்தர்)

பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி

பக்க வடிவமைப்பு: கே.டி. ஷமில சிந்தக (அர்ஜுன கிராபிக்ஸ் (தனியார்) நிறுவனம்

கணணி தட்டெழுத்து உதவி: சதுரிகா மதுஷானி

படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க, திலின திஸாநாயக்க

**தவறுகளை அடையாளம் கண்டு அதனை சரிசெய்ய ஒரு போதும் மறக்க வேண்டாம்**